# ஆதி மார்க்க னீதி மொழி

**November 2024**

***இதழ் 40 – நவம்பர் மாதம் 2024 வெளியீடு***
***© AMNA Trust, Chennai***



### மூலமந்நிரம்

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்ஙோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்நிர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

### பாத பூஜை

சுயம் பிரகாச னித்தியானந்ந பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்ந தேசிகேந்நிரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்.

### மகாசங்ஙல்ப மந்நிரம்

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் ஙோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்து மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்து ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்து தேவப்பிறப்பிலே பிறந்து ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai 

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே எதார்த்த நன்மன சற்சன மக்களே! பரிசுத்த ஆவித்தெய்வம் பரம்பொருள் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் ஆசீர்பாதத்துடன் னாழியோர் மேனிக் கடிகையோர் வண்ணம் என ஆதி மார்க்க னீதி மொழி மின்னணு சஞ்சிகை நாற்பதாம் இதழாக ஒன்பது அவை நிகழ்வுடன் மலர்ந்துள்ளது.

சடங்காலும் சாங்கியத்தாலும் விலக்க இயலாத அனீத நவக்கிரகத்தின் பிடியில் சிக்கி இருக்கும் ஒருவனை அதன் பிடியிலிருந்து விலக்கி கிரகங்களை அஸ்தமிக்கச் செய்து கிரகஸ்தனாக ஆக்கும் செயலே பிரம்மவித்தை. இதனை அடிநாதமாக வைத்து வேத வேதாந்த சாட்சிகளுடன் செயலாக்கி வைப்பதே ஆதி மார்க்க னீதி அவை. இதற்கு இலக்கணமாக தெளிந்த அறிவைப் பெற்று வாழ்கின்ற இவ் அவை மக்கள் பற்றி பேசும் சஞ்சிகையே உங்கள் கைகளில் தவழ்கின்றது.

இதைப் பார்த்து இக்காலத்தில் இப்படி ஒரு செயல் உள்ளதா என வியப்புற்று தேடும் மக்களுக்கே இதற்கான பலன் கிட்டும். இயேசு நாதரை கடவுளாகவே ஏற்றுக் கொண்டும் கூட கேளுங்கள், தட்டுங்கள், தேடுங்கள் எனும் சத்திய வேதத்தின் மகாவாக்கிய ரகசியத்தை அறியாத மக்கள் போலன்றி எங்கு, எதனை, எப்படி கேட்பது, தட்டுவது, தேடுவது என்ற ரகசியம் அறிந்த பெருமிதத்திற்கு உரிய மக்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள். ஜீவ சகோதர சகோதரிகளாக பேதமின்றி ஒருமித்த கருத்துடன் பொய்யுலக வாழ்வு கடந்து மகா உன்னதமான அறிவைப் பெற்று அறியாமை நீங்கி மெய்யான வாழ்வு வாழ்கின்றனர் என் அவையின் அங்கங்கள் யாவரும். இகவுலகில் நடைபெறும் இவர்களின் இல்லத்து இனிய நிகழ்வுகளுடன் மலர்ந்து வருவதே இந்த மின்னணு சஞ்சிகை.

*மெய்வழிக் குருமார் சொல் மேல் நோக்கமாகவும் பொய்வழி குருவின் போதம் கீழ் நோக்கமாகவும்* இருப்பதை நாத நாதாந்த வேத புராதனராக வந்த வேத நாயகன் சாலை ஆண்டவர்கள் தங்கள் நூலில் பொய்யும் மெய்யும் பிரித்துனக் கோதிடும் மெய் னிலைப்போத மென்ற (அவ்)விதாகுமே என அருளியுள்ளார்கள். அனித்திய உடலே நாம் என எண்ணி அழி அவாவுடன் கீழான எண்ணமுடன் வாழும் நாம் ஒரு ஆவிப் பொருள் என அறிந்து மனம் தெளிவதே மேல் நோக்கம். ஜீவனே சிவலிங்கம் என அறிவுத்தெளிவு பெற்ற மக்களின் நோக்கம் ஜல அம்சமாகிய மனதின் கீழ்நோக்கம் போலன்றி நெருப்பின் சுடர் போல் மேல் நோக்கியே இருக்கும். னோக்கியே னோக்கு னோக்குடை னோக்கெலாம் ஆக்கிய பிரவாகமிங் னோதுவாம் என சத்திய நாயகனாம் சாலை ஆண்டவர்கள் அருளிய திருவாக்கானது மெய்யாக வேண்டும் என்ற ஒரே ஒரு இலட்சியத்துடன் இயங்கிக் கொண்டிருப்பதுவே இந்த ஆதி மார்க்க னீதி அவை.



Copyright © AMNA Trust, Chennai 

**இம் மின்னணு சஞ்சிகையைப் பார்த்துப் படித்த யாவரும் பலன் பெற வேண்டிப் பேரிரக்கம் கொண்டு கூறும் இவ்வார்த்தை செயலுள்ள உண்மை என உணர்ந்து உன்னத மெய்யறிவு பெற்ற, பெறுகின்ற, பெறப்போகும் மக்களாக அனைவரும் வாழ்வாங்கு வாழ்வு வாழ வேண்டும் என பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடி போற்றி வணங்கி வாழ்த்துகிறேன்.**

**நமஸ்காரம்.**

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai 

*பொன் அறம் பிறந்த பீடபூமி - சர்வ பூமிகளையும் சர்வக்ஞத் தன்மைகளையும் சிருஷ்டித்துத் தருகின்ற திருப்பூமி; எல்லாவற்றிற்கும் சர்வ அழகுகளையும், சர்வ உயிர்ப்புக்களையும் தர்மமாக அளந்து கொண்டிருக்கிற திருஸ்த்தலம்; சர்வ கலைகளையும் பெற்று வளர்க்கிற மதி வளரும் பூவனம், உத்தியோவனம், தண்டகாரண்யம், ஒலிவாமலை; அதுவே உன் சொந்த பூமி.*

*எமனுடைய வாடை அடிப்பதுதான் மனிதர்கள் உள்ளத்தில் பயமாகவும் பேடித்தனமாகவும் இருக்கிறது. பத்துபேர் ஒரு பக்கமாகக் கூடிவிட்டால் னியாயத்தை மாற்றிப் பேசுவது மனித சுபாவம். ஆனால் மெய்ஞ்ஞான மகத்துக்களோ, எத்தனை பேர் எதிர்த்து னின்றாலும் னீதியையே பேசுவார்கள். அவர்கள் ஒத்தையாயிருந்நாலும், ஒத்தையாக இருக்கிறோமே என்று எண்ணுவதில்லை. தாங்ஙள் சொன்ன சொல் மாறமாட்டார்கள். னீதியாகிய இறைவனின் இலக்கிற்கு னேராகத்தான் இருப்பார்கள். அந்ந னித்தியனின் திருமுகத்திற்கு மாற்றக்காரராக இருக்கக்கூடாது என்றே சதா அவர்களின் சத்திய னினைவு இருக்கும்.*

*~ சாலை ஆண்டவர்கள்*



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2024 அக்டோபர் மாதம் அவை நிகழ்வுகள் – 2024 நவம்பர் மாதம் வெளியீடு

## 03-10-2024 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. வாசுதேவன்

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய **செல்வச்சீர் னபியை அந்நர் மா முகமாய்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**



வேத வேதாந்தங்கள் பறை சாற்றும் ஒரே ஒரு பொருளை அறிந்தவனே அறிவை அறிந்தவன். காசிதனில் மூழ்கி கரையேறி மும்மலம் தீர்ந்து நம்மை முச்சுடர் காண வைக்கும் செவிச் செல்வம் அருள்பவரே காசியப்பன். அசைவத்தை அகற்றும் வல்லமை கொண்ட பெருமாளை வணங்கும் சிறப்பான மாதமே புரட்டாசி. வல்லார் கள் நால்வருக்கும் கல்லாலின் புடை அமர்ந்து தென்முகக் கடவுள் வழங்கிய ஞான பாஷையே சமிக்ஞை பாஷை. ஆரோக்கிய வாழ்விற்கான அசைவற்ற மனதின் சைவ நிலையை அருளும் பெரியோர்களின் வாய்மையே தலையான செவிச்செல்வம். நீக்கமற எங்கும் நிறைந்த திசையற்ற ஒளி வடிவான இறைவனை அறிந்து அவனுடன் இரண்டறக் கலப்பதுவே மரணமிலாப் பெருவாழ்வு. அதற்கான அறிவைப் பெற்று மனம் செம்மையாகி அறிவுப் பிரகாசத்தில் ஆகிக் கொண்டவர்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள்.

*ஜீவசகோதரர் சங்கர்:*

சாலை ஆண்டவர்கள் அருளிய திருமெய்ஞானக் கொரல் 4 ஆம் வாக்கியத்தின் படி ஞானிகள், தான் பெற்ற பேரின்பத்தை வையகத்து மாந்தர் யாவரும் பெற வேண்டி, தங்களின் மதிச்சுமையை அதற்குரிய ஒருவரின் சிரசில் ஏற்றிய பின்பே தங்களின் அனித்திய உடலை துறக்கிறார்கள். ஆர்வ சித்தம் உள்ளவர்களே மெய் ஞானத்திற்கு அருகதை உள்ளவர்கள். நால்வகை சேனையுள்ள அரசன் எனினும் எமனை வெல்வதற்கு, எமனை வென்ற ஓர் மெய்க்குருவின் துணை கொண்டே வெல்ல முடியும். அப்படியான குருபிரானின் அருளானது நடனம் செய்யும் வசந்த காலத்தில் ஆகிக்கொண்ட மக்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள். பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

## 05-10-2024 ~ சனிக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பரிசுத்த ஆவி தெய்வம் பிரம்மப்பிரகாச மெய்வழிச்சாலை ஆண்டவர்களின் பொற்பாதங்களை வணங்கி வள்ளல் பெருமான் அருளிய **எல்லாஞ் செய் வல்ல தெய்வம் ...** என்ற திருஅருட்பா பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.



Copyright © AMNA Trust, Chennai 

**குருபிரான் அருளமுதம் :**

**வள்ளல்பிரான் அருளிய உண்மைப் பத்திரிக்கை எனும் தீர்க்கதரிசனம்**

வள்ளல்பிரானின் 201ம் ஆண்டு அவதாரத் திருநாளான இன்றும் என்றும் நாம் அறிய வேண்டியது யாதெனில், பிரம்மப் பிரகாசமான அறிவுப் பிரகாசம் அவரவர் உள்ளத்தில் நிகழ்வதே அவதாரமாகும். என்னாட்டவர்க்கும் இறைவனான தென்னாடுடைய சிவன் அவரவரின் சிரசில் தனித் தலைமைப் பெரும்பதியாக, அறிவு வடிவாக, காலனை சம்ஹாரம் செய்யும் மெய்ப்பொருளாக இருப்பதை ஒரு நிஜமான பிரம்மனிஷ்டரை சந்திக்கும் போதே அறிய முடியும். ஆணிடமிருந்து பெண் மூலமாக வெளிவரும் குழந்தை போல், ஆசானின் அறிவுப் பிரகாசம் தொண்டரிடம் வெளியாகும் நிலை குறித்தே *அந்தப் பதியின் அருளை நான்* ***பெறுவேன் பெறுகின்றேன் பெற்றேன்*** *என்னை அடுத்தவர்களும் பெறுவதற்கு யாதொரு தடையுமில்லை -* ***பெற்றீர்கள் பெறுகின்றீர்கள் பெறுவீர்கள்*** அஞ்சுவேண்டாம் எனவும், அருட்ஜோதி வடிவான அறிவு வடிவம் பெற்று மரணம் தவிர்த்தேன் என்றும், சுத்த சன்மார்க்கம் எக்காலத்துக்கும் விளங்கும் எனவும் வள்ளல்பிரான் தீர்க்க தரிசனமாக அருளியுள்ளார்கள். இந்திரிய ,கரண, ஜீவ, ஆன்ம ஒழுக்கமே மேன்மையாகும். பார்வை, செவி, வாசனை, ருசி, தொடு உணர்வு இவற்றை உணர வைக்கும் **நெற்றிக்கண், லலாடம், சபாத்துவாரம், மகம்மேரு எனும் ஆறாம் அறிவை** ஆசானின் அருளால் அறிந்து நாமத்துக்குரிய பொருளான ஜீவனைக் காண்பதே தன்னையறிதல் ஆகும்.

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் – 190 :** எண்டிசைக்கும் நான் என முன்னிற்கும் பஞ்சாட்சரத்தின் ரகசியம் அறிந்தவரே எதிர் ஜலத்தில் ஏடானது ஏறும் அகமிய ரகசியம் அறிவர். சிவ சக்தியாக அவரவரின் அழிதேகத்துள் நாமமாக, ஜீவனாக, அறிவாக உள்ள அழிவிலா அப்பொருளை அறிய வேண்டியது நம் கடமையாகும். **மாமிச இச்சை மரணம் ஆவிக்குரிய சிந்தனையே நித்திய ஜீவனும் சமாதானமுமாக இருக்கிறது** என்பதே ஞானத்தின் அடிநாதமாகும்.

*ஜீவசகோதரர் குமார்:* **சத்திய வேதம் - பேதுரு - 1:2,5,6,7:** *ஜீவனுள்ள கற்களைப் போல் ஆவிக்கேற்ற மாளிகையாக, இயேசு கிறிஸ்து மூலம் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும் படி பரிசுத்த ஆசாரியக் கூடமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள். விசுவாசிக்கும் ஒருவனுக்கு மூலைக் கல் விலையேறப் பெற்றும், கீழ்ப்படியாத ஒருவனுக்கு பிரதான மூலைக் கல் இடறுதற்கு ஏதுவான கல்லும் விழுவதற்கு ஏதுவான கன்மலையுமாயிற்று.*

அழி தோற்றத்தை விட்டு, அழியாத ஜீவனுக்கான மாளிகை அகமியத்தில் அரூபமாகக் கட்டப்பெறுவதாகவும், ஆவிக்கேற்ற பலியாவது கர்த்தரின் சுவிசேஷ நற்செய்திகளின் மூலம் அறியாமையைப் பலியிட்டு அறிவின்வழி செல்வதாகவும் உள்ளது. கட்டிடத்தை தாங்கும் அஸ்திபாரமான மூலைக்கல் போல், நம்மை தாங்கிப் பிடிப்பது **நினைவெனும் பிடரி மார்க்கமாகும்**. அமானிதமெனும் அறிவு கொண்டு விலையேறப் பெற்ற மூலைக் கல்லான அவ்விடத்தில் விசுவாசமாக இருப்பவன் பாவம் நீங்கி மரணமிலாப் பெருவாழ்வும், அதனை மறுதலிப்பவன் பாவத்தின் சம்பளமான மரணமும் அடைகிறான்.

**பூரணப்புதையல் - குருபிரான் அருளமுதம்:** அழியாச் செழிப்பேறி வளர்கின்ற பிரம்மவித்தைச் செயல் சத்திய வேதத்தில் அருளப் பெற்றுள்ளதை மெய்யறிவு பெற்ற மக்களே அறிவர். ஏட்டினில் எழுதிய எழுத்தாக இருந்த வேதத்தை, கூட்டினில் நிஜமதாக்கி, எழுதாத எழுத்தாகக் கண்ட காமீல்களின் துணையின்றி ஞான நிலையில் ஏறுதல் வழுக்கும் வழியாகும். வேத வித்தான மெய்ப் பொருளை அருள்பவரே வித்துநாயகம். அவர்களின் அருள் நம் அறியாமை அழுக்கை விலக்கித் திருத்தி, வேதத்தை விரித்து, அறிவை உள்ளத்தில் பொருத்தியதும் இனித்து வேத வீடு விடிகிறது. ஒழுக்கம், வைராக்கியத்துடன் கவனம் பாயும் போது முத்தி விருட்சத்தின் வித்தானது நினைவெனும் ஆகாயத்தில் விழுந்து வேர் மேலும் தலைகீழுமாக வளர்கிறது. வேதவித்தின் பிரம்மவித்தைச் செயல் தன்னில் அறியாதவனே புழுக்கையன். ஒழுக்கம், வைராக்கியம், கவனமுடன் தொடர்ந்து இருந்து நோக்கும் போதே மேலான மெய் நிலைகளை உணர முடியும். தெளிவான அறிவைப் பெற்று மெய்ஞானத்தின் துணைக் கருவிகளாய்த் திகழ, ஜீவ வாழ்வில் திடம்பட ஏற வேண்டும். இவ்வுடல் எடுத்த பயனை அறிந்து வாழ்ந்து, நம்மைச் சார்ந்த நன் மக்களுக்கும் இதைக் கொண்டு சேர்ப்பது நம் கடமை என்ற குருபிரான் அருளுரையுடன், பரிசுத்த ஆவி தெய்வத்தின் திருவடி போற்றி ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai November 2024

## 06-10-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிறப்பு அவை
## குருபிரான் அவதாரத் திருநாள்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழிச்சாலை ஆண்டவர்களின் பொற்பாதம் வணங்கி, **அரியானை அறியவைத்து அந்நணனா யெனைப்பிரட்டிப் பிறப்பித் தாரும்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

**இவ்வுடம் பெடுத்தல் எதற்கென எண்ணல் இறப்பும் பிறப்பும் எங்ஙே என்றாய்தல்** என சாலை ஆண்டவர்கள் அருளியதை ஒரு மெய்க்குருவின் அருளால் காரண தேகத்தின் ரகசியம் அறிந்தோரே அறிவர். நித்தம் உணர்த்தும் இறப்பெனும் உறக்கத்தின் ரகசியத்தை குருவருளால் அறிந்து தூங்காமல் தூங்கி சாமுன் சாகப் பழகுவதே பிரம் மவித்தை. இதனை அறிந்தவரே தன்னை அறிந்து சிவமான ஜாதி. ஆத்மார்த்தமான ஒன்றை அனைவருக்கும் வழங்க வந்ததே ஆதி மார்க்க னீதி அவை.



*ஜீவசகோதரர் சங்கர்:* காற்றைப் பிடிக்கும் கணக்கறிவித்து நித்தியத்தின் வழியில் நம்மை நடத்தி, அரிய மாமுதல் வழங்கி அறிவின் மேன்மையை அறிய வைக்கும் அரிய செயல் கொண்டதே சாலை ஆண்டவர்கள் அருளிய வேத வேதாந்தம் யாவும். நம் பிறவிப்பிணி தீர்த்து பிறவா வரம் அருள, பிறந்து வந்த பிறவா முதல்வனின் அவதாரத் திருநாளாம் இன்னாளே நல்ல நாள் பிறப்பு. வரும் நம் நாளெலாம் நல னாளாக மாற்றி வைக்கும் அரிய செயல் கொண்டதே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவசகோதரர் அருண்:* அறிவு அறியாமை எனும் இருவகை பிறப்பு கொண்ட மனுவின் உடலில் ஜீவன் குடியேறிய நாளும், விட்டு விலகிய நாளும் இறப்பும் பிறப்புமாக உள்ளது. தன் கடமையை அறியாத மனுவுக்கு அதை உணர்த்த வந்த செம்மல்களே ஞானிகள். புறத்தை நோக்கியே செல்லும் தனது மனதின் வழியான இறப்பின் பயணமும், அகங்காரமும் குருவருளால் அறிந்து அதை விட்டு விலகியவனே அமானிதம் எனும் அறிவை அறிந்தவன் ஆகிறான். முக்குணம் கடந்த நிர்க்குண நிலையே பிறவாமை ஆகும். காலன் இல்லாத காலமற்ற இடமே இனி சாகாதிருக்கும் இடம். தன்னை அறிந்த நித்தியரின் தனிப்பெரும் கருணையே நம் பிறவிப்பிணி தீர்க்கும் மாமருந்தாகும். பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

*பிரியமுள்ளவளே! குருகீதையைப் பக்தியுடன் படிப்பதாலும், கேட்பதாலும், தேகி சகல னற்பயனையுமடைகிறான். இதிலுள்ள ஒவ்வொரு எழுத்தும் முதன்மை பெற்ற மந்நிரமாகும். இது சகல பாவங்ஙளையும் கெடுப்பதும், சகல தரித்திரியங்ஙளையும் னாசஞ்ஞெய்வதும் ஆகும்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

## 10-10-2024 ~ வியாழக்கிழமை அவை~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய **ஆறைந்நும் ஒருவருக்காய்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

*ஜீவசகோதரர் சங்கர்:*
ஆறு நம்பிக்கைகள், ஐந்து கடமைகள், வேதம் வேதாந்தம் யாவும் ஞானிகள் தங்களின் பரிசுத்த னினைவில் இருந்து அருளியதாகும். சர்வத்துக்கும் தாய்க்குடிலான இறைவனின் இல்லமே மந்திரம். மெய்ஞ் ஞானத்தை அருளும் குருபிரானின் திருக்கரத்தின் சன்னதங்கள் யாவும் இறைவன் அருளிய முத்திரைகளே. தன்னை நாடி வந்த சீடர்களின் தலை காக்கும் குருபிரானின் செயலே தானமும் தர்மமுமாகும். குருவின் உத்தரவின்படி தன்னை அறிய ஈடுபடும் தவச்செயலே நோன்பு. நம் அறியாமையை விலக்கும் குருவின் செயலே பலி எடுப்பதாகும். குருவின் இரக்கத்தால் அகமுகத்தில் செல்லும் பயணமே ஹஜ் யாத்திரையாகும்.

சாலை ஆண்டவர்கள் அருளியுள்ள திருமெய்ஞானக் கொரலின் நான்காவது வாக்கியத்தின் உட்கருத்தாக தன் உயிரை அறிந்து இறைவனுடன் இரண்டறக் கலந்தவர்களே தீர்க்கதரிசிகள். அவரவருள் இருந்து, நான் என கூறும் பொருளுடன் கலந்து, நாம் என மாறும் செயலே ஞானம். சர்வத்தையும் தனதிடத்தில் வைத்திருக்கும் ஆன்மா லயமாகும் இடமே சர்வம் என்பதாகும். சர்வமதங்களின் அடிநாதமே மரணமிலாப் பெருவாழ்வு.

சாலை ஆண்டவர்கள் அருளியுள்ள பூரணப் புதையல் பாடலின் அகமிய ரகசியத்தின் படி, வினையால் உண்டான மானிட தேகத்தில் மனதின் செயலால் தோன்றும் மேல்-கீழான எண்ணங்களை அறிவாக மாற்றும் குருவின் செயலே நம்மை அழியாப் பதியில் குடியேறச்செய்யும். ஐந்தொழிலுக்கும் அரசனாக வரும் மெய்க் குருபிரானே பூரணப் புதையல். அவர்களின் நாத உடலே ஆறாவது அறிவின் கருவிக் குலமாகும். சாலை ஆண்டவர்கள் அருளியுள்ள படி னாமமாக இருப்பதே னன்னாதம். பஞ்ஞ பூதங்களையும் உள்ளடக்கிய பழம் புராதனமே பூரணம். சிற்றம்பலப் பொருளான பெரியோர்களின் திருவாக்கான நீதியெனும் பொருளே, நம் வாழ்நாள் வீணாகாமல் காப்பதே, கசடு நீக்கும் மெய்க் கல்வியாகும். கலைகள் அறுபத்து நான்கிற்கும் மேம்பட்ட ஓர் கலையை அறிந்தவரே பிறவாநெறி பெறுவர். எதார்த்த பரமாத்ம வடிவு தாங்கி வரும் குருபிரானின் வாய்மைக்குள் ஆகி வினை தீர்த்து, மெய்யுணர்வு பெற்ற மேங்குல மக்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள். பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 17-10-2024 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. புன்னகை மகேஷ்குமார்

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடி போற்றி வள்ளல் பிரான் அருளிய அருட்பா பாடலுடன் அவை இனிதே உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**
ஆதியில் தேவனிடம் இருந்து தேவனாகவே இருந்த சுத்தசைதன்ய நாதரின் சொல்லொரு பொருளே, மனுத் தலையுள் விளங்கும் ஜீவேசத்தகை வாழ்வுக்குரிய நீதியெனும் பொருளாகும். இதனை அறிந்த மக்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள்.

*ஜீவசகோதரி சரஸ்பதி வண்ணன்:* தன் இருவினை தீர்க்க வேண்டிய கடமை அறியாத நரனே மூவாசையில் உழன்று மாய்கிறான். ஆசானின் ஒரு சொல்லே இருவினை தீர்த்து ஒருவனை நித்திய வாழ்வில் குடியேற்றும்.



Copyright © AMNA Trust, Chennai 

**குருபிரான் அருளமுதம்:**
திருமெய்ஞ்ஞானக் கொரல் 4 ஆம் வாக்கியத்தின் படி, அமரருள் உய்க்கும் அடக்கமெனும் சொர்க்கமும், அவஸ்தை வாழ்வான நரகமும் மனுவுக்கே என்பதனை காலம் மூன்றும் கண்டு, தன்னை அறிந்த தவ சீலர்களின் தயவின் மூலமே நாம் அறிந்து நித்திய சொர்க்கபதி வாழ்வைப் பெற முடியும். மும்மலம் உள்ளவர் சகலராகவும், வினையின்றி ஆணவம் மாயை உள்ளவர் பிரளயாகலராகவும், இயற்கையாகிய ஆணவம் ஒன்றே உள்ளவர் விஞ்ஞானகலராகவும் வள்ளலார் அருளியுள்ளார். மனம் போன போக்கெலாம் போகாமல் மாற்றானை உறவென்று நம்பாமல் உன்னத குணமுடன் உத்தம நெறியில் நின்று, வாழும் பொழுதே கைலாய போக்குவரத்தில் இருக்கும் ஒருவனே மனிதன். அக உலகை தெளிவிக்கும் பரமாத்ம சொரூபத்தை அறிந்து கொள்ள ஞானிகள் அருளியதே உயிர்த் தமிழான திடதீர்க்கதரிசனம். இராமானுஜர், மத்துவர் இவர்களின் தவக்கோல சிலா ரூபங்களின் ரகசியமும், ஆதிசங்கரர் அருளிய பிரளய கால ரூபினித் தாயை சுவாதிஷ்டான சக்கரத்தில் பூஜிக்கும் செயலும் நிஜமாகும் இடமே ஆதி மார்க்க னீதி அவை.

**பூரணப் புதையல் - குருபிரான் அருளமுதம்:** ஐம்பொறியே ஐந்தொகை என அறியும் ஆறாவது அறிவே எழுவகை பொருட்கள் கொண்ட அமானிதம். அகமியத்தில் இறைவன் இருக்கும் அரங்கத்துள் குருவருளால் பக்தியின் பொருள் அறிந்து பழகியே நுழைய முடியும். காலகால காலம் கடந்த காருண்யப் பொருளே அகரமாக ஐம்புல நுகர்வின் ஈர்ப்பு விசையாக பிரபஞ்ச ஆற்றலெனும் பஞ்சாட்சரமாக உள்ளது. உலக மும்மலத்தின் ஒட்டு விட்டு தன்னையறியும் தவமுறையில் தலையிட்டு அழியா நிலத்தை ஆள்வோரே ஆண்டவர்களின் சந்ததியர் என்ற குருபிரானின் அருளமுதத்தை தொடர்ந்து ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

## 19-10-2024 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடி பணிந்து வேதாந்த தேசிகர் அருளிய **ஆதியுகத்தயன் கண்டிட நின்ற அருள் வரதர்...** என்ற திருப்பாடலுடன் அவை மலர்ந்தது.

ஆதி யுகத்தின் அதிசயங்களும், களிப்புறும் அரிய காட்சிகளும், ஆகாய வீதி விளையாட்டின் மூலம் கண்டு களித்த அருள் வரதராம் குருநாதரின் திருவடியில் சரண் புகுந்த அடியவர்களை, வானேறும் வழியாகிய 18 படி நிலையின் வாயிலாக ஏறா நிலமிசையில் ஏற்றி வைக்கிறார்கள்.

**கோடாயிதக்கூர் வாக்கியம் -191: குருபிரான் அருளமுதம் :**
சர்வ வேத வேதாந்த மறை பொருளின் தேவ ரகசியச் செயலை பேரிரக்கம் கொண்டு அருள்பவரே தனிமுதற் பெருமான். அவர்களிடம் நாம் வைக்கும் பெரும் பற்றே, புற உலகப் பற்றிலிருந்து நம்மை விடுவித்து மெய்யின்பால் ஓர்மை பெறச்செய்து பிறவாமை பெற்று பேரின்ப வாழ்வில் வாழ வைக்கும்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **பரிசுத்த வேதாகமம் - வெளிப்படுத்தின விசேஷ அதிகாரம் - 3 : 17,18 நிர்வாணம்:** நம்மை அழிவுக்கு இட்டுச் செல்லும் பேராசை, வெறுப்பு, அறியாமை எனும் மூன்று நெருப்புகளை நீக்குதலே நிர்வாணம் என்கிறது பௌத்த மதம். துப்புரவாளராக வரும் குருவின் திருவடி நிழலில் தஞ்சம் புகுந்து, அவர் இட்ட கட்டளை யாவும் சிரமேற் தாங்கி, உடல், பொருள், ஆவி தத்தம் செய்பவர்களே நிர்வாணம் எனும் மனதற்ற பரிசுத்த நிலையை அடைகின்றனர்.

**பூரணப் புதையல் - குருபிரான் அருளமுதம்:** ஒவ்வொரு கணமும் இறை கடாட்சமே நம்மை காக்கிறது எனும் அறிவுத் தெளிவில் வாழ்வோரே பூரணத்துவம் பெற்றவர்கள். இறைவன் படைத்த பஞ்சபூதத் துணையுடன் இயங்குவதே உலகம். பிரபஞ்சத்தின் இரகசியமான காலக் கணக்கே பூமியின் சுழற்சி, பருவ மாற்றம் அனைத்திற்கும் காரணம். காலச் சக்கரத்துள் சுழலும் இப்பூவுலகின் பாரப்பெரிய இரகசியமும், மனிதனை ஆள்கின்ற 9 கிரகங்கள், 12



Copyright © AMNA Trust, Chennai 

ராசிகள், 27 நட்சத்திரங்கள் இவற்றின் சூட்சும உயிர்க்கணக்கை அறிந்த பெரியோர்களே நவக்கிரக அதிகாரம் கடந்த நாத ஜோதிடராக வருகின்றனர். அவர்களே காலம் கடந்த பொருளை தன் சொந்த கைப்பொருளாகப் பெற்று, பொன்மேனி மின் வீசும் புகழுடம்பில் குடியேறி ஜொலிக்கும் பூரண வடிவினர். அவர்களின் நாதமே, நம்மையும் காலன் அணுகா இடமாகிய காலாதீத எல்லையில் குடியேற்றி, ஜீவவிருட்ச நிழலில் நித்தம் வளர்வித்து ஜென்ம சாபல்யம் அளிக்கிறது என குருபிரான் அருளியதைத் தொடர்ந்து, பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

## 24-10-2024 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய **அரண்டிடும் மடத்தாருபதேசம்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**

நித்திய உடலை விட்டு அனித்திய உடலை அசலென நினைப்பவரே அரண்டிடும் மடத்தார். சீடனின் உள்ளத்தில் சிவபோகம் நடத்தும் குருவே சிவன். பழம்புராதன பண்ணாரமணி உண்டைப் பெட்டகமே அவரவரின் சிரசில் வீற்றிருக்கும் சிரஞ்சீவி. அறியாமையை சங்காரம் செய்து குருபிரான் தீப வளி கொண்டு நம்மிடம் அறிவு ஒளி ஏற்றும் நாளே தீபவளித் திருநாள். அறிவுக்கும் உயிருக்கும் ஆதாரமான ஒன்றை அடிநாதமாக கொண்டதே ஆதி மார்க்க னீதி அவை.

**திருமெய்ஞ்ஞானக் கொரல்: வாக்கியம் எண் - 5 : குருபிரான் அருளமுதம்:**

அறுசுவை உணவே மனிதனின் அறிவை துலங்கச் செய்யும். அழல் நாற்றம் அகற்றி ஓரறிவாய் விளங்கும் பெரியோர்களின் திருமேனியின் சீர்மணமே செண்பக மலர் மணம். இறை தத்துவம், ஆகம விதிகள் இவற்றை அறிய ஆலயம் செல்லும் பயணமே ஷேத்திராடனம். விதியாக காலமாக உள்ள கருப்பை கூடி கலந்த வினைத் தொடரை ஆசான் அருளால் அறம் செய்து வினை தீர்த்துப் பெறுவதே பிறவாமை.

*ஜீவசகோதரர் குமார்:*

குருவருளால் மெய்யறிந்த மக்கள் தங்களின் இருதயப் பிரகாசத்தை உணரும் தலமாக விளங்குவதே திருவண்ணாமலையில் உள்ள இடைக்காடர் மற்றும் அருணகிரிநாதர் சன்னதி. சத்திய வேதம் அருளும் **தட்டுங்கள் கேளுங்கள் தேடுங்கள்** எனும் அகமியச் செயலறிய குருவின் பேரருள் பெருங்கருணை வேண்டும்.

**பூரணப் புதையல் - குருபிரான் அருளமுதம்:**

ஏகாட்சரம், வாசிப் பழக்கம், வித்யா பாதம், அவித்யா பாதம், ஈரேழு உலகின் ரகசியம் பொதிந்ததே பூரணப் புதையல். மலர்மிசை ஏகி மாணடி சேர்ந்த பத்ம சத்தரே மும்மலம் நீறாக்கிய நிஷ்களர். அறியாமை எனும் இருள் விடிந்த நாளே நல்ல நாள் பிறப்பாகும். பழகித்தேரும் மெய்க் கல்வியை படிப்படியாக மக்களிடம் பழக்கும் பரமகுருவின் செயலே பிரம்ம வித்தை. இறைவனின் அருட்கொடையால் சகலமும் நிறைவேறும் செயலே ஆமீன் என்பதாகும். காலம் கடந்த காலாதீதனின் இருப்பிடமே கங்குல் பகலற்ற மனிதனின் சுத்தத்துறை இருதயமாக விளங்கும் அவரவரின் சொந்த வீடு. திசையற்ற சுயம் பிரகாசப்பொருள் உதிக்கும் திசையையும் அந்தமுள பிரணவத்தையும் அறிய அன்னாடு சென்று வரும் ஆசான் வேண்டும். வினையினால் விளைவதே மானிடச் சட்டையின் புலனும் பொறியும் ஐம்புல நுகர்வும் மனமும் குணமும். தேகம் அழியும் முன் இதனை அறிந்தவனே வினை தீர்க்க விழைகிறான். அமரருள் உய்க்கும் அகமிய அடக்கச் செயலும் ஆதி மார்க்க னீதி அவையின் அடி நாதத்துள் ஒன்றாகும். பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai November 2024

## 26-10-2024 ~ சனிக்கிழமை ~ காஞ்சிபுரம் அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. மணிமொழி மஞ்சுநாதன்

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் கௌதம்:* திருவண்ணாமலை திருத்தலமதில் இடைக்காட்டு சித்தர் சன்னதி, அருணகிரி நாதரின் சன்னதி முன் குருவருளால் நாம் செய்யும் மெய்வணக்கம் நமக்கு நற்கதி அருள்வது சத்தியமே. புலன் வழியில் வீணாகும் வாழ்நாளை மீட்டுத் தரும் குருவே புண்ணியத்தின் உரு. மனிதனின் பரிசுத்த இருதயத்தில் இருக்கும் இறைவனைக் காண குருபிரான் அருள்வதே முரீது. மனதால் சிறைப்பட்ட நாம் முத்தீயின் மூலம் முக்தி அடைவதே விடுதலை. நெற்றிக்கண் திறந்து நம் தசாபுத்தி விலக்கி மும்மலம் கருகச் செய்து நிராதாரமான பராபரத்தை அறியச் செய்வது குருவின் இரக்கமே. நித்தியப் பொருளான எழுதாத எழுத்தை குருபிரான் அருள் மூலமே தரிசிக்க முடியும். ஓடும் சுவாசம் ஒடுங்கும் இடமான மூலப் பொட்டலையும், தத்துவம் இன்னதெனவும் அவரவரும் தன்னில் அறியச் செய்யும் குருவருளே கூர்மதி. வினாச காலமே மனதில் விபரீத புத்தியை உண்டாக்கும். அதை விலக்கி அதிலிருந்து நம்மை காக்கும் ஆசானே பிரம்மனிஷ்டர். நாம் பரிசுத்த மறுபிறப்பு பிறக்கும் குருவின் திருமுகமே ஜனன வாசல்.

*ஜீவசகோதரர் சங்கர்:* குருபிரான் அருளும் உபதேசத்தை காதில் கேட்டு செயலாக்குவதே முக்திக்கு வழி. அறிவாகிய ஜீவனை அறிந்து அவ்வழியில் செல்பவனே நீதி வழி நடப்பவன். செவிச்சுவை உணர்ந்தவனே நரனிலிருந்து மனுவாக மாற முடியும். நித்தியத்தில் நம்மை ஆக்கும் ஞான வழியில் அழைத்துச் செல்லும் ஆசானின் திருவுருவே ஆன்மப் பிரகாசம். ஐவழி விளைவுக்கு அப்பாலுள்ள மெய்வழியை உணர்ந்து அவரவரும் தன்னை அறியும் திருத்தலமாகத் திகழ்வதே ஆதி மார்க்க னீதி அவை. பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

## 27-10-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. அருணா சுதர்சன்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப்பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் பொற்பாதம் போற்றி அவை இனிதே மலர்ந்தது.

**குருபெருமான் அருளமுதம்:**

சுயம் பிரகாச மெய்ப் பொருளை அறிந்து, அதனுடன் இரண்டறக் கலந்து அனுபவிக்கும் அறிவைத் தரும் **மூலமந்திரம், பாதபூஜை, மகாசங்கல்ப மந்திரம்** இவற்றை செயலாகக் கொண்டதே ஆதி மார்க்க னீதி அவை. சுயம்பிரகாச பஞ்சாட்சரப் பொருள் ஒவ்வொரு மனுத்தலையுள்ளும் கேசாதி பாதம் வரை ஊடுருவி நிற்கும் நிலையை அறிவதே தன்னை அறிதல். உருத்திரன் கண்டு அஞ்சும் குளிகையே உருத்திராட்சம். ***ஈசனின் கை ஆயுதமான தனுசாகிய பிணாகம், ராமபிரானின் கோதண்டம், கிருஷ்ணரின் சாரங்கம்*** இவை யாவும் **கு** எனும் இருளை மரித்து வெளிச்சத்திற்கு உரிய குமரன் குமரியாக மாற்றும் சுயம்பிரகாசப் பொருளாக உள்ளது. ஐம்புல நுகர்வில் ருசியாக பேச்சாக ஓசையாக வாசனையாக தொடுஉணர்வாக காட்சியாக இருப்பதை அறிவதே ஞானம்.

பிரகாசம் இன்னதென அறிவிக்கும் ஆன்மப் பிரகாசத்தை அறிவதே அறிவைப் பெற்றதன் அடையாளம். சொர்க்கம் நரகம் உண்டு எனும் ஈமான் கொண்டவர்க்கே ஞானம் கிட்டும். எண் சாண் உடலுக்குப் பிரதானமான சிரசைக் கட்டிய தலையே சாகாத்தலை. வேர் மேலும் தலை கீழுமாக விளங்கும் சாகாக் காலே இறை இல்லமாக விளங்குகிறது. பாசம் எனும் மனவழி விட்டு பதி வசம் சேர்ந்தவர்க்கே பிறவாமை கிட்டும். அறுசுவை கொண்டு ஒளிக்கும் இடத்தை அறிவதே ஞானநூல் பொருள் அறிதல் - அதை அறிந்தவனே அமரன். சாக்ரடீஸ் தத்துவத்தின்படி கேள்வி மூலம் பெறுவதே மெய்ப்பொருள். அதுவே அவரவரின் நாமத்துக்குரிய பொருளாகும். பிறப்பெனும் பேதமை நீங்கி அமரனாகி மரணமிலாப் பெருவாழ்வு வாழ எண்ணத்தில் தூய்மையும் உயிரினும் மேலான ஒழுக்கமும் வேண்டும். தீராத பிறவி நோயின் தாகம் தீர்க்கும் தடாகமாகத் திகழ்வதே ஆதி மார்க்க னீதி அவை.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரர் சங்கர்:*

இவ்வுடல் கடந்த ஆவிப்பொருளான நம்மை, நாம் அறிவதற்கான அறிவே ஆறாம் அறிவு. இறைவனுடன் இரண்டறக் கலந்து தான் பெற்ற பேரின்பத்தை அனைவரும் பெற வேண்டும் என்பதே பெரியோர்களின் நோக்கம். அனுதினமும் காசி சென்று கங்கையில் நீராடி முத்தியடையும் அகமியச் செயலை அறிவதற்கு ஆர்வசித்தம் உள்ள மக்கள் அனைவரும் உரியவரே. நித்திய மகிழ்ச்சி வாழ்வு வாழ்வதற்கான தெளிந்த அறிவைத் தரும் திருத்தலமே ஆதி மார்க்க னீதி அவை. பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடி போற்றி ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

*இந்நக் குருகீதை அகால மிருத்யுவைக் கெடுப்பதற்கும், எல்லா விபூதியினது (அயிஸ்வரியங்ஙளினது) சித்தியைப் பெறுவதற்கும் வழிகாட்டியா யிருக்கிறது.*

***~ குரு கீதை***

**குரு வா ஆழ்க! குருவே துணை!**



Copyright © AMNA Trust, Chennai

## 2024 அக்டோபர் மாதம் நடைபெற்ற அவை நிகழ்வுகள்

### 06-10-2024 ~ ஞாயிற்றுக்கிழமை

குருபிரான் சாலை இரவி அப்பா அவர்களின் அவதாரத் திருநாள் சிறப்பு நிகழ்ச்சியும், ஆதி மார்க்க நீதி அவையின் செயலாளர் திரு. மணிவண்ணன் அவர்களின் பேரப்பிள்ளைகள் சித்தார்த்தன் மற்றும் நிரஞ்ஜன் அவர்களின் மூன்றாம் ஆண்டு பிறந்தநாள் விழாவும் சென்னை - அண்ணா நகரில் உள்ள Sea Shell Restaurant (சீஷெல் உணவகத்தில்) சிறப்பாக நடைபெற்றது.








### 21-10-2024 ~ திங்கள்கிழமை

குருபிரான் சாலை இரவி அப்பா அவர்கள் முன்னிலையில் ஜீவதம்பதியர் பாலாஜி - அனுஷா இவர்களின் மகன் பூஷன் திருமண வைபவம் திருவண்ணாமலையில் சிறப்பாக நடைபெற்றது.





Copyright © AMNA Trust, Chennai 

**27-10-2024 ~ ஞாயிற்றுக்கிழமை**

குருபிரான் சாலை இரவி அப்பா அவர்கள் சிவகாசியில் எழுந்தருளி ஞான தேட்டமுள்ள னன்மன மக்களை சந்தித்து அருளமுத வர்ஷிப்பு வழங்கினார்கள்.






Copyright © AMNA Trust, Chennai 

## ஆதி மார்க்க னீதி அவையின் வருங்கால நிகழ்வுகள்

| நாள்/ இடம் | னிகழ்வுகள் |
|---|---|
| **01-12-2024 / சென்னை** | **மெய்வழி குழந்தை சாமி கவுண்டர் ஐயா** அவர்களின் அவதாரத் திருநாள் (29.11.2024) சிறப்பு அவை 01-12-2024, ஞாயிற்றுக்கிழமை, காலை 11.00 மணியளவில் குருபிரான் சாலை இரவி அப்பா அவர்கள் முன்னிலையில் சென்னை - அண்ணாநகர் - Sea Shell Restaurant-ல் நடைபெற இருக்கிறது. |
| **05-12-2024 / சிவகாசி** | குருபிரான் சாலை இரவி அப்பா அவர்கள் முன்னிலையில் ஜீவதம்பதியர் செந்தில் - சண்முகப்பிரியா (சிவகாசி) அவர்களின் மகள் திருவளர்ச் **செல்வி ஸ்ரீலட்சுமி ஸ்ரீமா - சியாம் ராஜ்** அவர்களின் திருமணம் சிவகாசியில் நடைபெற இருக்கிறது. |
| **13-12-2024 / சென்னை** | குருபிரான் சாலை ரவி அப்பா அவர்களின் திரு முன்பாக **கார்த்திகை தீபத் திருனாள்** ஆதி மார்க்க னீதி அவை அலுவலகத்தில் **(நாயகன் இல்லம்)** மாலை 6.00 மணிக்கு கொண்டாடப்பெற இருக்கிறது. |
| **25-12-2024 / சென்னை** | குருபிரான் சாலை ரவி அப்பா அவர்களின் திரு முன்பாக ஆன்ம லாபம் பெற்ற **திரு. சரவணகுமரன்** இரண்டாம் ஆண்டு பூர்த்தி விழா, ஆதி மார்க்க னீதி அவை அலுவலகத்தில் **(நாயகன் இல்லம்)** நடைபெற இருக்கிறது. |
| **29-12-2024 / சென்னை** | 01-01-2025 புது வருடத்தை முன்னிட்டு குருபிரான் சாலை ரவி அப்பா திரு முன்பாக சென்னை அண்ணாநகர் Sea Shell Restaurant-ல் சிறப்பு அவை நடைபெற இருக்கிறது. |


Copyright © AMNA Trust, Chennai

**குருபிரான் தங்களின் திரு நோக்கினின்றும் நோக்கிய பிரகாரம் ஆதி மார்க்க னீதி அவையின், 2024 அக்டோபர் மாதம் குருபாதம் போற்றி நல்லுணர்வுடன் நல்லுள்ளம் கொண்டு நன்கொடை வழங்கிய நன்மக்களின் எண்ணிக்கை - 132**

**அனைவருக்கும் நன்றி !!!**

**AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்க ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

**Account Name: Aathi Margha Neethi Avai**
**Account Number: 50200047470073**
**IFSC: HDFC0000323**
**Branch: Mylapore**



Copyright © AMNA Trust, Chennai

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

***www.amnatrust.org***

**Contact Us**:

*Email: write2amnatrust@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

***பின்குறிப்பு**: இம்மின்னணுச்சஞ்சிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Sankar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 40 – Month: November 2024*



*Copyright © AMNA Trust, Chennai* 